# O.S. NO. 75/2006

**D.W.3 திருமதி. ராஜஸ்ரீ 23.03.2021**

**4, 10, 20 முதல் 24 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி தொடர்ச்சி :**

1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் மீனாட்சி என்று கையெழுத்து போடமாட்டார். பேச்சியம்மாள் என்று தான் கையெழுத்து போடுவார். கைரேகையும் வைப்பார். 1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் 2006 முதலே கைரேகை வைக்க ஆரம்பித்தார். 1ம் பிரதிவாதி பேச்சியம்மாளுக்கு பேச்சியம்மாள் என்ற மீனாட்சி என்றோ மீனாட்சி என்ற பேச்சியம்மாள் என்றோ பெயர் இருப்பதாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பேச்சியம்மாளுக்கு மீனாட்சி என்ற பெயர் எதுவும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியை மீனாட்சி என்று யாரும் அழைத்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் என்ற பெயரிலோ மீனாட்சி என்ற பெயரிலோ Madura Coats Millல் எப்போதும் வேலை பார்த்தது கிடையாது என்றால் சரியல்ல. பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ 41 மற்றும் 42 ஆன பிறப்பு சான்றிதழ்கள் 1ம் பிரதிவாதி சம்பந்தப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனக்கு மீனாட்சி என்ற பெயர் உண்டு என்று அவரே சொல்லிக் கொண்டதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ 52 ஆன 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள குடும்ப அட்டையில் பேச்சியம்மாள் என்று தான் பெயர் உள்ளது. பிவாசாஆ 53 ஆன 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள வாக்காளர் அடையாள அட்டையில் பேச்சியம்மாள் என்று தான் பெயர் உள்ளது. தாவா 1ம் இலக்க சொத்தில் இருந்த 10 ஓட்டு வீடுகளும் இடிக்கப்பட்டு 7 கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 7 கான்கிரீட் வீடுகளும் மேற்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். மேற்படி 7 கான்கிரீட் வீடுகளில் தெற்கு கடைசியில் உள்ள வீடு எனது தாயாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டிற்கு வடக்கே 4ம் பிரதிவாதியின் தாயார் விஜயலட்சுமி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அவர் வாடகை கொடுத்து குடியிருந்து வந்தார். விஜயலட்சுமி குடியிருந்த வீட்டிற்கு வடக்கே 6ம் பிரதிவாதி மயில்ராஜம் என்பவர் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அவர் வாடகை கொடுத்து குடியிருந்து வந்தார். மயில்ராஜம் குடியிருந்த வீட்டிற்கு வடக்கே 7ம் பிரதிவாதி கோமதி குடியிருந்து வந்தார் என்றால் இல்லை. கோமதி குடியிருந்த

வீட்டிற்கு வடக்கே வாதி செண்பகவள்ளி குடியிருந்து வந்தார் என்றால் இல்லை. வாதி செண்பகவள்ளி குடியிருந்த வீட்டிற்கு வடக்கே 10ம் பிரதிவாதி பானுமதி குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. பானுமதி குடியிருந்த வீட்டிற்கு வடக்கே உள்ள வீடு 1ம் பிரதிவாதி பேச்சியம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட வீடு என்றால் சரியல்ல. விஜயலட்சுமி மயில்ராஜம் ஆகியோர் யாரிடம் வாடகைதாரர்களாக இருந்து வருவதாக சொல்கிறேன் என்றால் 1ம் பிரதிவாதியிடம் இருந்தார்கள். விஜயலட்சுமி மயில்ராஜம் ஆகியோர் வாடகைதாரர்களாக இருந்து வருவதாக சொல்வதை காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். 7 கான்கிரீட் வீடுகளுக்கும் தனித்தனியாக மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். 7 கான்கிரீட் வீடுகளையும் சண்முகம்பிள்ளை தான் தனது சொந்த பணத்தில் கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. 7 கான்கிரீட் வீடுகளும் கட்டி முடித்த பின்பு 7 கான்கிரீட் வீடுகளில் தெற்கிலிருந்து வடக்காக உள்ள 6 கான்கிரீட் வீடுகளை 6 பெண்மக்களுக்கு சண்முகம்பிள்ளையே ஒதுக்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. 7 வது வீட்டை தனது மனைவியான பேச்சியம்மாளுக்கு ஒதுக்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. 6 பெண்மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 6 கான்கிரீட் வீடுகளுக்கான மின்சார இணைப்பு 6 பெண்மக்கள் பெயர்களில் பெறப்பட்டது என்றால் சரிதான். 7 கான்கிரீட் வீடுகளுக்கும் ஆதியில் ஒரு போர்வெல் தான் இருந்தது என்றால் சரிதான். சண்முகம்பிள்ளை போட்ட ஒரு போர்வெல் எந்த பக்கம் இருக்கிறது என்றால் வடக்கு கடைசியில் உள்ளது. 1989ல் மயில்ராஜமும் கோமதியும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில் முதல் மாடி எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. 10ம் பிரதிவாதி பானுமதியும் வாதி செண்பகவள்ளியும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில் முதல் மாடி எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. 7 கான்கிரீட் வீடுகளில் மயில்ராஜம், கோமதி, பானுமதி, செண்பகவள்ளி ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில் மட்டும் தான் முதல் மாடி இருக்கிறது என்றால் சரிதான். 1993ம் ஆண்டு கோமதி, பானுமதி, செண்பகவள்ளி ஆகியோர்கள் சேர்ந்து ஒரு போர்வெல் போட்டுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கோமதி, பானுமதி, செண்பகவள்ளி அவர்கள் சேர்ந்து போட்ட போர்வெல்லில் இருந்து மேற்படி 3 நபர்களின் வீடுகளுக்கும் சேர்த்து தண்ணீர் சப்ளை சென்று கொண்டிருக்கிறது என்றால் சரியல்ல. ஆதியில் 1ம் இலக்க சொத்தில்

உள்ள 7 கான்கிரீட் வீடுகளுக்கான வரி ரசீது பேச்சியம்மாள் பெயரில் உள்ளது. 7 கான்கிரீட் வீடுகளுக்கும் ஒரே வரி விதிப்பு தான் என்றால் சரிதான். ஆரம்பத்தில் 7 கான்கிரீட் வீடுகளுக்கான வரியை 6 பெண்மக்களும் 1ம் பிரதிவாதியும் ஈவித்து சேர்ந்து கட்டி வந்தார்கள் என்றால் சரியல்ல. தற்போது வீட்டு வரி மயில்ராஜம், கோமதி, உயிரோடு இருக்கும் போது அவர்கள் இருவரும் பானுமதி மற்றும் செண்பகவள்ளியுடன் சேர்ந்து தாவா 1ம் இலக்க சொத்திற்கான வீட்டு வரியை செலுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது தாயார் தனலெட்சுமி நான் 1 வயது இருக்கும் போது கரூரில் குடியேறினார். சுமார் 20 வருடங்கள் கரூரில் குடியிருந்தோம். 7ம் பிரதிவாதி கோமதி 1982,1983 வருடங்களில் அருப்புக்கோட்டையில் குடியிருந்தார் என்றால் சரிதார் , அந்த காலக்கட்டங்களில் வாதி செண்பகவள்ளி சென்னையில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். 7 கான்கிரீட் வீடுகளில் எனது தாயார் தனலெட்சுமி 7ம் பிரதிவாதி கோமதி, வாதி செண்பகவள்ளி ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளை அவர்கள் வாடகைக்கு விட்டுவிட்டுச் சென்றார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் 2006 ஜனவரி மாதம் வரை 2ம் இலக்க சொத்தில் தான் குடியிருந்தார் என்றும் 1ம் இலக்க சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். 7 கான்கிரீட் வீடுகளில் வடக்கு கடைசியில் உள்ள வீட்டை 1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் வாடகைக்கு விட்டிருந்தார் என்றால் சரிதான். நான் 1970ல் பிறந்தேன். தாவா 1ம் இலக்க சொத்தில் இருந்த ஓட்டு வீடுகளை யார் கட்டியது என்றும் அதன் பின்னர் அதனை இடித்து விட்டு 7 கான்கிரீட் வீடுகளை யார் கட்டியது என்ற விவரம் குறித்து எனது தாயாரை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். 7 கான்கிரீட் வீடுகளை 1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் தனது சொந்த பணத்தில் தான் கட்டினார் என்று உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்துகளில் உள்ள வீடுகளில் விஜயலட்சுமி மற்றும் மயில்ராஜம் ஆகியோர்கள் வாடகைதாரர்களாக குடியிருந்து வந்தார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 51ஆன ஆவணம் பேச்சியம்மாள் and sons என்ற நிறுவனத்தின் பெயரில் தான் உள்ளதே தவிர பேச்சியம்மாள் என்ற தனிப்பட்ட பெயரில் இல்லை என்றால் சரிதான். பிவாசாஆ 62 ஆவணம் பேச்சியம்மாள் என்ற தனிப்பட்ட பெயருக்கு அனுப்பப்பட்டதாக இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி

பேச்சியம்மாளுக்கு அதிகமான சர்க்கரை நோய் மற்றும் ரத்த கொதிப்பினால் வலது கை Paralysis Attack ஏற்பட்டு வலது கை தூக்க முடியாமல் 15.01.2006 ல் மதுரை திலகர் திடல் அருகில் உள்ள லெட்சுமி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. 3 மாத காலம் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. 04.09.2006 ல் 1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் இறந்து விட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பேச்சியம்மாள் வீட்டில் வைத்து தான் இறந்தார், அவர் இறந்தது தாவா 1ம் இலக்க சொத்தில் உள்ள தெற்கு கடைசியில் உள்ள வீடு என்று சொன்னால் சரிதான். அதுவும் அவரது வீடு தான். 1ம் பிரதிவாதி பேச்சியம்மாளுக்கு அதிகமான சர்க்கரை நோய் மற்றும் ரத்த கொதிப்பினால் வலது கை Paralysis Attack ஏற்பட்டு வலது கை தூக்க முடியாமல் மற்றும் செயல்பட முடியாமல் இருந்து வந்தார் என்றும் மேற்படி லெட்சுமி மருத்துவமனையில் 15.01.2006 ல் அனுமதிக்கப்பட்டு 3 மாத காலம் மருத்துவ சிகிச்சை எடுத்து வந்தார் என்றும் தொடர்ந்து அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டார் என்றும் மேற்படி விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக அவைகளை எல்லாம் இல்லை என்று பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தில் வடக்கு கடைசி வீட்டில் தற்போது சோணைமுத்து என்பவர் ஒத்திதாரராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். சண்முகம்பிள்ளை மற்றும் பேச்சியம்மாள் ஆகியோர் 1948 ல் இருந்து தாவா 2ம் இலக்க சொத்தில் தான் குடியிருந்து வந்தனர் என்றால் சரிதான். 2006ம் ஆண்டு 1ம் பிரதிவாதிக்கு உடல் நிலை சரியில்லாமல் லெட்சுமி மருத்துவமனையில் இருந்து தாவா 1ம் இலக்க சொத்தில் உள்ள வீட்டிற்கு முதன் முதலில் அழைத்து வரப்பட்டார் என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை நிறுத்தம் செய்யப்பட்டது)